**இறக்குமதிகளுக்கான நட்டோத்தரவாதக் கடிதம்**

| 42 | FO | IM | 04 |
|---|---|---|---|

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ
(கம்பெனி பதிவில. PQ 27)
இல. 40, நவம் மாவத்தை
கொழும்பு 02

அன்புள்ள ஐயரீர்,

**1) கப்பலேற்றல் உத்தரவாதங்களில் கையொப்பமிடுதலின் விளைவான நட்டோத்தரவாதம்**

ஏற்று பொருட்பட்டியலை எதிர்பார்த்து கப்பற்சரக்கை விடுவிக்குமாறுகோரி காலத்துக்குக்காலம் எம்மால் செய்யப்பட்ட எழுத்திலான கோரிக்கைகளின் நியதிகளின்படி எவரேனும் கப்பலேற்றல் முகவர் / ஒழுங்கமைப்புக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட நட்டோத்தரவாத / உத்தரவாதக் கடிதங்களுக்கு நீர் கீழொப்பமிடுவதனைக் கருத்திற்கொண்டு, இலங்கையில் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்டதும் ........................................ என்னும் முகவரியில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதுமான கம்பெனியொன்றாகவுள்ள ( ................. என்னும் கம்பெனிப் பதிவிலக்கத்தைக் கொண்ட) ....................................................... ஆகிய நாம், அத்தகைய நட்டோத்தரவாத / உத்தரவாதக் கடிதங்களை நீர் நிறைவேற்றுவதன் விளைவாக எழக்கூடிய எத்தகையதுமான எல்லா இழப்புக்களிலிருந்தும் விளைவுகளிலிருந்தும் இத்தால் உம்மை தீங்கேற்படாதவாறும் நட்டோத்தரவாதமளிக்கப்பட்டவாறும் வைக்கின்றோம்.

(i) இலங்கையின் ஏற்புடையற்பாலனவான சட்டங்களின்படி விதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஆவணங்களின் பிரதிகளுக்கு நேரொத்ததாகவுள்ள மூல ஆவணங்களைப் பெறுவதற்கு இத்தால் நாம் இல்லாதொழிக்கமுடியாத வகையில் உடன்பட்டு பொறுப்பேற்கின்றோம்.

(ii) எமது கோரிக்கையின்பேரில் வழங்கப்பட்ட முறையான கப்பலேற்றல் உத்தரவாதத்தின் முழுமையான பெறுமதிக்கு உமக்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கும் மேற்கூறப்பட்டவாறு சொல்லப்பட்ட உத்தரவாத / நட்டோத்தரவாதக் கடிதங்களில் நீர்

கையொப்பமிட்டிருப்பதன் காரணமாக அல்லது சொல்லப்பட்ட பண்டங்களை எமக்கு ஒப்படைப்பதன் காரணமாக அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட வேறு வகையாக நீர் அடையக்கூடிய அல்லது உறக்கூடிய நாணயமாற்று வீதங்களிலான தளம்பல் காரணமான எவையேனும் இழப்புக்கள் உட்பட அதன் எல்லா விளைவுகளுக்கும் எதிராகவும் கோரிக்கைகள், வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், பொறுப்புக்கள், உரிமைக்கோரிக்கைகள், சேதங்கள், இழப்புக்கள், செலவுதொகைகள் மற்றும் எத்தகையதுமான செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராகவும் நட்டோத்தரவாதமளிக்கப்படுவதாக உம்மை வைத்திருப்பதற்கும் அதன் விளைவாக அல்லது அதிலிருந்து எழுகின்ற உம்மால் செய்யப்பட்ட அல்லது அடையப்பட்ட எல்லா கொடுப்பனவுகளையும், இழப்புக்களையும், செலவுதொகைகளையும் மற்றும் செலவுகளையும் கோரிக்கையின் மீது உடனடியாக உமக்குச் செலுத்துவதற்கும் ஏற்று பொருட்பட்டியல் அல்லது வேறு உரித்து ஆவணங்களைப் பெறுவதன் மீது நாம் ஒன்றில் அதனை உரியமுறையில் புறக்குறிப்பிட்டு உமக்கு ஒப்படைப்போம் எனவும் அல்லது சொல்லப்பட்ட உத்தரவாதத்தை (உத்தரவாதங்களை) நட்டோத்தரவாதத்தை (நட்டோத்தரவாதங்களை) மீளஒப்படைப்பதனை அல்லது பொறுப்புவிடுவிப்பதனைச் செய்விப்போம் எனவும் இத்தால் நாம் இல்லாதொழிக்கமுடியாதவாறும் நிபந்தனையற்ற முறையிலும் உடன்படுகின்றோம்.

(iii) ஏற்பு நியதிகளுக்கு எதிராக ஆவணங்களின் கீழ் பட்டியல்கள் தொடர்பில் எம் மீது வரையப்பட்ட மாற்றுண்டியல்களை ஏற்றுக்கொள்வதற்கு இல்லாதொழிக்கமுடியாத வகையில் நாம் உடன்பட்டுப் பொறுப்பேற்கின்றோம்.

(iv) கலனின் சொந்தக்காரர்கள் / முகவர்கள் அல்லது தொடர்பான ஏற்று பொருட்பட்டியலை வைத்திருப்பவர்கள் உம்மிடமிருந்து அல்லது கலனின் முகவர்கள் ஊடாக கொடுப்பனவுகளைக் கோருகின்ற பட்சத்தில், எமது உத்தரவாதம் / நட்டோத்தரவாதத்தில் எந்த தொகைக்காக நீர் கீழொப்பமிட்டிருக்கின்றீரோ அந்த அதிகபட்ச தொகை வரை அத்தகைய கொடுப்பனவுகளை எதிர்கொள்வதற்கும் அத்தகைய கொடுப்பனவுகளை கோரிக்கையின்மீது செலுத்தப்படற்பாலதாக எமக்கு வழங்கப்பட்ட கடனொன்றாக கருதுவதற்கும் இத்தால் நீர் அதிகாரமளிக்கப்படுகின்றீர். கோரிக்கையின்மீது அத்தகைய கடன்களை அதன் மீதான வட்டியுடன் சேர்த்து செலுத்தீடு செய்வதற்கு இத்தால் நாம் உடன்படுகின்றோம்.

(v) உண்டியல்களில் தோன்றக்கூடிய எத்தகையனவுமான எவையேனும்

ஒவ்வாமைகள் எவ்வாறிருப்பினும், எமக்கு மேலும் குறிப்பீடு செய்யாமல் உமது தொடர்பாளரிடமிருந்து இயைபான மூல ஆவணங்களைப் பெறுவதன் மீது அவற்றை முன்னரே முடிவுறுத்துவதற்கு இத்தால் நாம் உமக்கு அதிகாரமளிக்கின்றோம். அத்தகைய எல்லா ஒவ்வாமைகளும் இத்தால் விட்டுக்கொடுக்கப்படுகின்றன. முறையான கலன் முகவருக்கு மூல ஏற்று பொருட்பட்டியலை நீர் அனுப்பி இயைபான உத்தரவாத / நட்டோத்தரவாதக் கடிதத்தின் இரத்துச்செய்கையைப் பெறலாம்.

(vi) மூல விலைப்பட்டியலில் உள்ள பண்டங்களின் பெறுமதி முறையான உத்தரவாத / நட்டோத்தரவாதக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறான பண்டங்களுக்கு மிகையாக இருக்காது என நாம் மேலும் உறுதிப்படுத்துகின்றோம்.

(vii) எம்மால் அடையாளம் காணப்பட்ட பண்டங்களை இறக்குமதி செய்தல் மற்றும் அவற்றுக்கான கொடுப்பனவு தொடர்பாக நீர் தேவைப்படுத்தக்கூடிய செலவாணிக் கட்டுப்பாடு மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஆவணங்கள் எல்லாவற்றையும் கோரிக்கையின் மீது உமக்கு கொடுத்துதவுவதற்கு நாம் பொறுப்பேற்கின்றோம்.

(viii) பண்டங்களின் உள்ளீடுகள், நிலைமைகள், தரம், தொகை அல்லது அளவுக்குறிப்பீடுகள் தொடர்பாக உதாரணமாக எல்லா அம்சங்களிலும் முழுமையாக எமது சொந்த ஆபத்து மற்றும் பொறுப்புக்களில் எம்மால் விடுவிக்கப்படும் பொதிகளின் எடை அத்துடன் / அல்லது பெறுமதி அத்துடன் / அல்லது உள்ளீடு செய்யப்பட்ட விலை தொடர்பாக ஏதேனும் பிறழ் விவரணம் அல்லது பிழையானதன்மைக்கு (மோசடியாகவிருப்பினுங்கூட) நீர் எவ்வகையிலும் பொறுப்பாதலாகாது என நாம் இத்தால் உடன்படுகின்றோம்.

(ix) இதன் கீழ் எமது கடப்பாடுகளை நாம் பூர்த்திசெய்கின்றவாறான அத்தகைய காலம் வரை மேற்கூறப்பட்டவாறு எம்மால் விடுவிக்கப்பட்ட பண்டங்கள் அல்லது அவற்றின் விற்பனை வரும்படிகள் உமது வங்கிக்காக எம்மால் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும் எனவும் அத்தகைய விற்பனை வரும்படிகள் உமக்கு கிடைக்கக்கூடியதாக வைத்திருக்கப்படுதல் வேண்டும் எனவும் இத்தால் மேலும் நாம் உடன்படுகின்றோம்.

(x) மேற்கூறப்பட்டவாறு எம்மால் விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு கப்பலேற்றல் அனுப்புபொருட் தொகுதிக்கான பண்டங்கள் விற்பனை செய்யப்படும்வரை

அவை, நீர் தேவைப்படுத்துகின்றவாறு தீ, திருட்டு மற்றும் வேறு எல்லா சாதாரண ஆபத்துக்களுக்கும் அல்லது அத்தகைய வேறு காரணங்களுக்காகவும் எதிர்பாராத நிலைமைகளுக்கும் எதிராக முறையாகக் காப்புறுதி செய்யப்படுதல் வேண்டும் என நாம் மேலும் உறுதிப்படுத்துகின்றோம் அத்துடன் உம்மால் கோரப்படின் மற்றும் கோரப்படும்போது காப்புறுதிப்பத்திரத்தை உமக்கு குறித்தளிப்பதற்கும் இதன்கீழ் எமது கடப்பாடுகளைப் புரியும் வரை அத்தகைய காப்புறுதிப் பத்திரத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான காப்புறுதிப் பணம் உமக்குக் கிடைக்கக்கூடியதாக வைத்திருக்கப்படுதல் வேண்டும் எனவும் அது எம்மால் பெறப்படின் அது உமக்குச் செலுத்தப்படும்வரை உமது சார்பாக எம்மால் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும் எனவும் நாம் உடன்படுகின்றோம்.

(xi) அத்தகைய நேரத்தில் உம்மால் எமக்கு சேர்மதியாகவுள்ள எவையேனும் பணத்தொகைகளுக்கு எதிராக உம்மால் அவ்வாறு செலுத்தப்பட்ட ஏதேனும் தொகையை எமக்கான முன்குறிப்பீடு இன்றி அத்தகைய எல்லாக் கொடுப்பனவுகளுடனும், இழப்புக்களுடனும், செலவுதொகைகளுடனும், வட்டியுடனும் மற்றும் செலவுகளுடனும் எமது கணக்குக்கு மிகைப்பற்றுவைக்கும் அளவுவரை கூட சொல்லப்பட்ட கணக்குக்கு பற்றுவைப்பதற்கும் அல்லது எதிரீடு செய்வதற்கும் இத்தால் நாம் உமக்கு அதிகாரமளிக்கின்றோம்.

(xii) உமது உத்தரவாத தரகுப்பணம், தபாற்செலவு மற்றும் முத்திரைத் தீர்வை மற்றும் வேறு விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவற்றை எமது கணக்கிலிருந்து அறவிடுவதற்கு நாம் உமக்கு மேலும் அதிகாரமளிக்கின்றோம்.

(xiii) எம்மால் காலத்துக்குக்காலம் கோரப்பட்ட மேற்கூறப்பட்ட கொடுக்கல்வாங்கல்களில் வேறு வங்கி எதுவும் சம்பந்தப்படவில்லை என நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

## 2. விலைப்பட்டியல்களின் முற்கூட்டிய பிரதிகளை முத்திரையிடலின் விளைவான நட்டோத்தரவாதம்

கப்பலேற்றல் ஆவணங்களின் வருகைக்கு முன்னர் அனுப்பு பொருட்தொகுதியை எனக்காக / எமக்காக விரைவாக விடுவிப்பதற்கென கப்பலேற்றல் ஆவணங்களின் முற்கூட்டிய பிரதிகளை புறக்குறிப்பிடுவதற்கான எழுத்திலான எமது கோரிக்கையுடன் நீர் இணங்கியொழுகுவதனைக் கருத்திற்கொண்டு,

(i) இலங்கையின் ஏற்புடையற்பாலனவான சட்டங்களின் படி விதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஆவணங்களின் பிரதிகளுக்கு நேரொத்ததாகவுள்ள மூல ஆவணங்களைப் பெறுவதற்கு இத்தால் நாம் இல்லாதொழிக்கமுடியாத வகையில் உடன்பட்டு பொறுப்பேற்கின்றோம்.

(ii) மேற்கூறப்பட்டவாறு கப்பலேற்றல் ஆவணங்களின் முற்கூட்டிய பிரதிகளில் நீர் புறக்குறிப்பிடுவதன் காரணமாக அல்லது சொல்லப்பட்ட பண்டங்களை எனக்கு / எமக்கு ஒப்படைப்பதன் காரணமாக அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட வேறு வகையாக நீர் அடையக்கூடிய அல்லது உறக்கூடிய நாணய மாற்று வீதங்களிலான தளம்பல்கள் காரணமான எவையேனும் இழப்புக்கள் உட்பட அதன் எல்லா விளைவுகளுக்கும் எதிராகவும் கோரிக்கைகள், வழக்குகள், வழக்குநடவடிக்கைகள், பொறுப்புக்கள், உரிமைக்கோரிக்கைகள், சேதங்கள், இழப்புக்கள், செலவுதொகைககள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராகவும் உமக்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கும் உம்மை நட்டோத்தரவாதமளிக்கப்படுவதாக வைத்திருப்பதற்கும் அதன் விளைவாக அல்லது அதிலிருந்து எழுகின்ற உம்மால் செய்யப்பட்ட அல்லது அடையப்பட்ட எல்லா கொடுப்பனவுகளையும், இழப்புக்களையும், செலவுதொகைகளையும் மற்றும் செலவுகளையும் கோரிக்கையின்மீது உடனடியாக உமக்குச் செலுத்துவதற்கும் நிபந்தனையற்ற முறையில் நான் / நாம் இத்தால் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம்.

(iii) மேற்கூறப்பட்டவாறு ஏதேனும் காரணத்துக்காக எனது / எமது கடப்பாடுகளை நான் / நாம் பூர்த்திசெய்யாவிடின், அப்போது உமது வங்கி கொண்டிருக்கக்கூடிய வேறு எல்லா உரிமைகளுக்கும் பங்கமின்றி, உம்மால் அவ்வாறு கோரப்படும் தொகையை கடன் கணக்குக்கு பற்றுவைப்பதற்கு அல்லது அத்தகைய தொகையை நான் / நாம் உமது வங்கியில் வைத்துள்ள வேறு ஏதேனும் கணக்குக்கு பற்று வைப்பதற்கு இத்தால் நீர் அதிகாரமளிக்கப்படுவதுடன் அவ்வாறு பற்று வைக்கப்பட்ட தொகை, எனக்கான / எமக்கான அறிவித்தலின் கீழ் பிணைப்பொறுப்பின் எல்லை மற்றும் வலுவுறுத்துகை, வட்டி முதலியவற்றின் கொடுப்பனவு மற்றும் இக்கொடுக்கல்வாங்கல் தொடர்பாக உறப்பட்ட எவையேனும் விதிப்பனவுகள் உட்பட சொல்லப்பட்ட கடன் அல்லது வேறு கணக்கு எந்த நியதி நிபந்தனைகளின்கீழ் தொழிற்படுகின்றதோ அந்த எல்லா நியதிநிபந்தனைகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

(iv) இதன்கீழ் எமது கடப்பாடுகளை நாம் பூர்த்திசெய்கின்றவாறான அத்தகைய காலம் வரை மேற்கூறப்பட்டவாறு என்னால் / எம்மால் உரிமைகோரப்பட்ட பண்டங்கள் அல்லது அவற்றின் விற்பனை வரும்படிகள் உமது வங்கிக்காக எம்மால் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும் எனவும் அத்தகைய விற்பனை வரும்படிகள் உமக்கு கிடைக்கக்கூடியதாக வைத்திருக்கப்படுதல் வேண்டும் எனவும் இத்தால் மேலும் நான் / நாம் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம். மேற்கூறப்பட்டவாறு எம்மால் விடுவிக்கப்பட்ட பண்டங்கள் விற்பனை செய்யப்படும் வரை, அவை நீர் தேவைப்படுத்துகின்றவாறு தீ, திருட்டு மற்றும் வேறு எல்லா சாதாரண ஆபத்துக்களுக்கும் அல்லது அத்தகைய வேறு காரணங்களுக்காகவும் எதிர்பாராத நிலைமைகளுக்கும் எதிராக முறையாயகக் காப்புறுதி செய்யப்படுதல் வேண்டும் என நாம் இத்தால் மேலும் உடன்பட்டு பொறுப்பேற்கின்றோம் அத்துடன் உம்மால் கோரப்படின் மற்றும் கோரப்படும்போது காப்புறுதிப்பத்திரத்தை உமக்கு குறித்தளிப்பதற்கும் இதன்கீழ் எமது கடப்பாடுகளைப் புரியும்வரை அத்தகைய காப்புறுதிப் பத்திரத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான காப்புறுதிப் பணம் உமக்குக் கிடைக்கக்கூடியதாக வைத்திருக்கப்படுதல் வேண்டும் எனவும் அது எம்மால் பெறப்படின் அது உமக்குச் செலுத்தப்படும்வரை உமது சார்பாக எம்மால் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும் எனவும் நாம் உடன்படுகின்றோம்.

(v) இதன்கீழ் கொடுப்பனவைப் பயனுறுத்துவதற்கான எனது / எமது பொறுப்பு ஆவணங்களில் காணப்படக்கூடிய எவையேனும் ஒவ்வாமைகளை அல்லது கடன் பத்திரங்களின் எவையேனும் நியதி நிபந்தனைகள் இணங்கியொழுகப்படவில்லை என்பதைப் பொருட்படுத்தாமல் இருத்தல் வேண்டும் எனவும் இது தொடர்பான எவையேனும் பிணக்குகளை எழுப்புவதற்கு நாம் சுதந்திரமாக இருக்கமாட்டோம் எனவும் நான் / நாம் இத்தால் மேலும் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம்.

(vi) மேற்கூறப்பட்டவாறு என்னால் / எம்மால் விடுவிக்கப்படவேண்டிய பண்டங்களின் தரம் அல்லது தொகை தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனையை எழுப்புவதற்கு எனக்கு / எமக்கு சந்தர்ப்பம் இல்லை எனவும் சொல்லப்பட்ட பண்டங்கள் ஒப்பந்தத் தரத்துக்கு அல்லது விதிக்கப்பட்ட அளவுக்குறிப்பீடுகளுக்கு அல்லது எத்தகையதுமான வேறு ஏதேனும் ஏதுவின்மீது இசைந்தொழுகவில்லையென நான் / நாம்

கருதுவதற்கு சுதந்திரமுடையவராக / சுதந்திரமுடையவர்களாகவில்லை என நான் / நாம் மேலும் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம் என்பதுடன் எல்லா அம்சங்களிலும் எனது / எமது சொந்த ஆபத்து மற்றும் பொறுப்பில் முழுமையாக என்னால் / எம்மால் விடுவிக்கப்படும் பண்டங்களின் நிலைமைகள், தரம் அல்லது அளவுக்குறிப்பீடுகளுக்கு எவ்வகையிலும் வங்கி பொறுப்பாகமாட்டாது என என்னால் / எம்மால் தெளிவாக உடன்பட்டு விளங்கிக்கொள்ளப்படுகின்றது.

(vii) உமது வங்கியின் மீது இந்நட்டோத்தரவாதக் கடிதத்தினால் அளிக்கப்பட்ட உரிமைகளும் தத்துவங்களும் நீர் இப்போது அல்லது இதனகத்துப்பின்னர் எனது / எமது கணக்குக்காக அல்லது கணக்கின்மீது வைத்திருக்கக்கூடிய வேறு எவையேனும் பிணைப்பொறுப்புக்களுக்கு மேலதிகமாகவும் அவற்றுக்குப் பங்கமில்லாமலும் இருத்தல் வேண்டும் என நான் / நாம் இத்தால் மேலும் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம்.

(viii) என்னால் / எம்மால் சொல்லப்பட்ட பண்டங்களை இறக்குமதி செய்தல் மற்றும் அவற்றின் கொடுப்பனவு தொடர்பாக நீர் தேவைப்படுத்தக்கூடிய செலாவணிக் கட்டுப்பாடு மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஆவணங்கள் எல்லாவற்றையும் கோரிக்கையின் மீது உமக்கு கொடுத்துதவுவதற்கு நான் / நாம் பொறுப்பேற்கின்றேன் / பொறுப்பேற்கின்றோம்.

இத்தால் வழங்கப்பட்டவையும் அளிக்கப்பட்டவையுமான பொறுப்பேற்புக்களும் அதிகாரவளிப்புக்களும் இல்லாதொழிக்கமுடியாதவாறாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லாப் பொறுப்பேற்புக்களும் அதிகாரவளிப்புக்களும் ஏதேனும் நேரத்திலும் காலத்துக்குக் காலமும் எம்மால் உமக்கு வருமதியாகவுள்ள எல்லாப் பணங்களும் முழுமைய செலுத்தப்படும் வரை தொடர்ந்து வலுவிலிருத்தலும் வேண்டும்.

வங்கியானது எமது முன்னங்கீகாரத்தைப் பெறாமல் இதன்கீழான அதன் எவையேனும் உரிமைகளை அல்லது எல்லாவற்றையும் வேறொரு திறத்தவருக்கு குறித்தளிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் நான்/ நாம் ஒப்புக்கொள்கின்றேன் / ஒப்புக்கொள்கின்றோம்.

இந்நட்டோத்தரவாதக் கடிதம் இலங்கையின் சட்டங்களினால் ஆளப்படுதல் வேண்டும் என நான் / நாம் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம்.

(மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட ‘‘நாம்’’ என்னும் சொல் தனியாள் ஒருவரின் விடயத்தில் மரபுரிமையாளர்கள் நிறைவேற்றுநர்கள் நிருவாகிகள் மற்றும் சாட்டுநர்கள் எனவும் கம்பெனி / குழு / கூட்டிணைப்பு ஒன்றின் விடயத்தில் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்கள் எனவும் பொருள்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றை உள்ளடக்குதலும் வேண்டும்.)

20…………… ஆம் ஆண்டு ………….. மாதம் ………… திகதியன்று

பெயர், இலச்சினை மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பம்

எவையேனும் மாற்றங்கள் மற்றும் அழித்துவிடுதல்கள் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்களின் முழுமையான கையொப்பத்தை இடுவதன்மூலம் முறையாக மெய்யென உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்